சுதந்திர தின சிறப்பிதழ் – பதிப்பு 1
ஆகஸ்ட் 2026 | ரூ.20

# ஒரே நாடு

இமயம் முதல் குமரி வரை

# அல்காரிதமே அசந்து போச்சு!




பக்கம் 8 தேர்வு முறையில் புதிய வரலாறு

பக்கம் 11 மோடியின் திருக்குறள் நேசம்

பக்கம் 22 இந்துத்துவ சிந்தனையின் எழுச்சிக் குரல்!

உள்ளே பாரதப் பிரதமரின் வண்ணப்படம்!

## தமிழக பாஜக தலைவர்

# திரு. நயினார் நாகேந்திரன்

## அவர்களின் வாழ்த்துரை!

**தாமரைச் சொந்தங்களுக்கு, வணக்கம்.**

நமது பாரதிய ஜனதா கட்சியின் அதிகாரப்பூர்வ தமிழ் இதழான இமயம் முதல் குமரி வரை "ஒரேநாடு 2.0" மீண்டும் புத்தம் புதுப் பொலிவுடன் அச்சு மற்றும் டிஜிட்டல் ஊடகங்களில் வெளிவரவிருப்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

25வது ஆண்டு வெள்ளி விழா கண்டு, நம் இதயங்களில் கோலோச்சிக் கொண்டிருக்கும் ஒரேநாடு, வெறும் காகிதம் அல்ல; பாரதிய ஜனதா கட்சியின் அறிவாயுதமாகும்.

ஒரேநாடு இதழ் நமது உள்ளங்களில் மலர்ந்து மணம் வீசுவதைப்போல, தமிழ்நாட்டின் கடைக்கோடியிலுள்ள தமிழர்களின் இல்லங்களிலும் சென்றடைய வேண்டும். உலகத் தலைவர்: பாரதப் பிரதமர் மரியாதைக்குரிய திரு. நரேந்திர மோடி ஜி அவர்களின் தலைமையிலான, மத்திய அரசின் திட்டங்களையும், செயலாக்கங்களையும், விளக்கிக் கூறும் ஒரு விளக்க ஏடாகவும் இருக்க வேண்டும்.

வெளிவரவிருக்கும் "ஒரேநாடு 2.0" இதழ் ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேரூன்றி, வெற்றி வாகை சூட வேண்டுமென மனமார வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்றும் தாயகப்பணியில்
**நயினார் நாகேந்திரன்**
பாஜக மாநிலத் தலைவர் – தமிழ்நாடு



## மத்திய அமைச்சர்

# டாக்டர்.திரு.L.முருகன்

## அவர்களின் நல்வாழ்த்துகள்!

**'ஒரே நாடு' மாத இதழ் மற்றும் டிஜிட்டல் பதிப்பு துவக்க விழாவுக்கு உளங்கனிந்த வாழ்த்துகள்!**

தமிழ்நாட்டில் பாரதிய ஜனதாவின் வளர்ச்சியில், கட்சியின் அதிகாரப்பூர்வ ஊடகமாகச் செயல்படும் 'ஒரே நாடு' ஏடு அரும்பங்காற்றி வருகிறது. பொதுமக்களிடமும், கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களிடமும் தகவல்களை உடனுக்குடன் துல்லியமாகக் கொண்டு சேர்க்கும் அதன் பணிகள், கட்சியின் வளர்ச்சியில் முக்கியமானவை.

இன்றைய ஊடகச் சூழலுக்கு ஏற்றவாறு அச்சிடப்பட்ட இதழாகவும், இணையதளச் செய்தித் தளமாகவும், கட்சியின் அதிகாரப்பூர்வ தகவல்களைத் தாங்கி வரும் ஏடாகவும் விளங்கி வருகிறது.

தமிழகத்தின் மூலைமுடுக்கில் இருக்கும் பாஜக தொண்டர்களுக்குக்கூட கட்சியின் பணிகள், தலைவர்களின் கருத்துகள், நமது கொள்கைகள், எண்ணங்கள், நிகழ்ச்சிகள் என அனைத்தையும் கொண்டு சென்று சேர்ப்பதில் 'ஒரே நாடு' செய்து வரும் பணிகள் பெரும் பாராட்டுக்குரியவை.

நமது பாரதிய ஜனதா கட்சியின் போர்வாளாகச் செயல்படும் 'ஒரே நாடு', தற்போது புத்தம் புது பொலிவுடன் மாத இதழ் மற்றும் டிஜிட்டல் பதிப்பாக வெளியாவது நம் அனைவருக்கும் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

'ஒரே நாடு' மாத இதழ் மற்றும் டிஜிட்டல் பதிப்பின் ஆசிரியர் மற்றும் பதிப்பாளரான திரு. எஸ்.ஆர். சேகர் M.A., B.L. அவர்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய தருணத்தில், 'ஒரே நாடு' இதழின் வளர்ச்சிக்குப் பங்களித்து வரும் ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுகளையும் உரித்தாக்குகிறேன்.

தமிழகத்தில் பாரதிய ஜனதா கட்சியின் வளர்ச்சிக்கு 'ஒரே நாடு' மாத இதழ் மற்றும் டிஜிட்டல் பதிப்பு கூடுதலான ஆக்கமும் ஊக்கமும் அளித்திடும் என்பதில் சந்தேகமில்லை.

'ஒரே நாடு' இதழ் மட்டுமின்றி, தமிழக பாஜகவின் சாதனைப் பயணத்திலும் இது மைல்கல்லாக அமையட்டும் என வாழ்த்துகிறேன்.

டாக்டர்.**L.முருகன்** LL.B., LL.M. (International Law), Ph.D. (Law),
மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணை அமைச்சர்



# தலைவர்களின் வாழ்த்து மழையில் ஒரே நாடு



## DR. ARAVIND MENON

BJP NATIONAL SECRETARY AND IN-CHARGE, TAMIL NADU

As we stride purposefully towards a Valarchiyadaintha Bharatham, we must remain firmly anchored in our glorious civilisational heritage, carrying forward the unifying vision of Orey Bharatham, Unnatha Bharatham.

The Orey Naadu magazine beautifully captures the spirit and heartbeat of this historic national transformation.

May these pages inspire a fierce and unbreakable sense of patriotism, while serving as a timeless and living testament to the Bharatiya Janata Party's profound, inclusive, culturally rooted, and nation-first vision of nationalism.

## DR.P.SUDHAKAR REDDY

EX-MLC, BJP NATIONAL CO-IN-CHARGE, TAMIL NADU

The media, rightly regarded as the fourth pillar of democracy, carries an important responsibility in shaping public awareness, strengthening democratic values and fostering a spirit of patriotism and commitment towards national welfare.

I am delighted to know that 'Orey Naadu' has re-emerged in both e-magazine and print editions, with a renewed commitment to highlighting constructive developments, inspiring initiatives and stories that contribute positively to our society and our nation.





**தேசிய சிந்தனையாளர்களுக்கும், விசுவாசமிக்க வாசகர்களுக்கும்...**

**அன்புடையீர், வணக்கம்.**

காலத்தின் கட்டாயத்தையும் தொழில்நுட்பத்தின் பாய்ச்சலையும் உள்வாங்கி, நமது 'ஒரே நாடு' இதழ் இப்போது **'ஒரே நாடு 2.0'** என்ற புதிய பரிமாணத்தில், அச்சு மற்றும் டிஜிட்டல் தளங்களில் வீறுநடை போடுகிறது. இது வெறும் வடிவ மாற்றம் அல்ல; நமது சித்தாந்தப் பயணத்தின் சரித்திரப்பூர்வமான பாய்ச்சல். ஒரு பதிப்பாளராகவும் தலைமை ஆசிரியராகவும் இந்தப் புதிய அத்தியாயத்தை உங்கள் கரங்களில் ஒப்படைப்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

தொண்டர்களுக்கும் தலைமைக்கும் இடையிலான தகவல் தொடர்பை அதிவேகமாக்குவதுடன், பாரதிய ஜனதா கட்சியின் தேசியக் கொள்கைகளை ஒவ்வொருவர் மனதிலும் ஆழமாக வேரூன்றச் செய்வதே **'ஒரே நாடு 2.0'**-இன் தலையாய நோக்கமாகும். தேச நலனே முதன்மை என்ற நமது உன்னத இலட்சியத்தை, இந்த டிஜிட்டல் யுகத்தில் ஒவ்வொரு சாமானியனிடமும் கொண்டு செல்வோம்.

இன்றைய அரசியல் சூழலில், திட்டமிட்டுப் பரப்பப்படும் பொய்களும், பிரிவினைவாத சக்திகளின் அவதூறுகளும் ஊடகவெளியை ஆக்கிரமிக்கத் துடிக்கின்றன. இந்த விஷமப் பிரச்சாரங்களை வேரறுக்க நமக்குத் தேவை தற்காப்பு அல்ல; சித்தாந்த ரீதியான அதிரடித் தாக்குதல்! அந்தத் தாக்குதலைத் தொடுக்கும் கூர்மையான அறிவாயுதமாக, உண்மையை உரக்கச் சொல்லும் போர்வாளாக நமது 'ஒரே நாடு' திகழும். அவதூறு செய்யும் எதிரிகளின் முகத்திரையை ஆதாரத்துடன் கிழித்தெறிந்து, பொய்ப் பிரச்சாரங்களுக்குச் சவுக்கடி கொடுக்கும் வலிமையான ஊடகமாக இது செயல்படும்.

ஒவ்வொரு தொண்டரும் இந்தப் பத்திரிகையின் தூதுவர்களாக மாறி, கொள்கை ஜ்வாலையை வீதிதோறும் எடுத்துச் செல்ல வேண்டும். உண்மையின் பக்கம் நின்று, புதிய பாரதம் படைக்க ஒன்றிணைவோம், வாருங்கள்!

**வந்தே மாதரம்! ஜெய் ஹிந்த்!**
**என்றும் தேசியப் பணியில்,**

**எஸ்.ஆர். சேகர்,** M.A., B.L.
ஆசிரியர் மற்றும் பதிப்பாளர், 'ஒரே நாடு'.



# தமிழால் பாரதம் பாடிய மகாகவி!

நம் பாரத நாடு இன்று 80வது சுதந்திர நாளை கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் தமிழ் அறிஞர்கள், குறிப்பாக, சுதந்திர கால கட்டத்தில் வாழ்ந்த பாரத தமிழ் எழுத்தாளர்கள் நம் தேசம் பற்றி என்ன விதமாக எண்ணியிருந்தனர் என சிந்திக்கும் போது, நம் நினைவிற்கு முதலில் வரும் ஒரே கவிஞர் மகாகவி பாரதியார் தான்!

அவர் இத்தனைக்கும் நம் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பாகவே மறைந்து விட்டவர். ஆனாலும், அவர் போல கருத்தாழமிக்க பாடல்களால் சுதந்திர தாகத்தினை ஊட்டிய தமிழ்க் கவிஞர் வேறு எவருமில்லை.

> செப்பு மொழி பதினெட்டுடையாள் எனில் சிந்தனை ஒன்றுடையாள்.

என்கிற பாரதியின் பாடல் வரிகள் வரலாற்றில் பொறிக்கத்தக்க தேசிய வரிகள்!



பாரதியின் பார்வையில், இந்தியாவின் ஒற்றுமை என்பது ஒரே மாதிரியான தன்மையைக் குறிக்கவில்லை. பல மொழிகள், பல மரபுகள், பல பிராந்தியங்கள் கொண்ட ஒரு தேசம், ஆழமான தேசிய உணர்வின் மூலம் ஒன்றுபட முடியும் என்ற நம்பிக்கையே அவரது சிந்தனையின் மையமாக இருந்தது. பல மொழிகளைப் பேசினாலும், ஒரே தேசியச் சிந்தனையால் இணைக்கப்பட்ட நாடு என்பதே பாரதத்தின் இயல்பு என்ற பாரதியின் கருத்து இதில் வெளிப்படுகிறது.

இது வெறும் நிர்வாகக் கோஷமல்ல; **வேற்றுமையில் ஒற்றுமை** என்ற பாரதிய ஜனதா கட்சியின் நாகரிகக் கொள்கையின் கவிதை வடிவமாகும்.
அதே போலவே தேசிய உணர்வினை ஊட்டும் மற்ற பாடல் வரிகள்!...

> வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
> வாழிய பாரத மணித்திரு நாடு!

மேற்கண்ட வரிகள், பிரிவினை அரசியலின் அடித்தளத்தையே சவாலுக்கு உட்படுத்துகின்றன.

பாரதியின் பார்வையில், தமிழ் மற்றும் இந்தியன் என்ற இரு அடையாளங்களும் ஒன்றுக்கொன்று போட்டியிடுபவை அல்ல. அவை, ஒன்றை ஒன்று விரிவுபடுத்தும் அடையாளங்கள்.

தமிழ் அவரது நெருக்கமான கலாச்சார அடையாளம் என்றால், பாரதம் அந்த அடையாளத்தின் விரிந்த நாகரிக வடிவமாக இருக்கிறது. எனவே, அவரது தேசிய உணர்வு, ஆழமான வேர்களைக் கொண்ட, அதே நேரத்தில் பரந்த பார்வையுடைய நாகரிக தேசிய உணர்வாகும்.

### காசியும் காஞ்சியும் அறிவால் இணைந்த பாரதம்

மகாகவி பாரதிக்கு இந்தியா என்பது புனிதத் தலங்கள், அறிவுப் பாரம்பரியம் மற்றும் கலாச்சார உறவுகளால் ஒன்றிணைக்கப்பட்ட உயிருள்ள நாகரிகம்!

அவருக்கு கங்கை மற்றும் காவிரி நதிகள் இரு எதிர் உலகங்களின் அடையாளங்களல்ல காசியும் காஞ்சியும் வட தெற்கு எதிர்ப்பின் சின்னங்களுமல்ல. அறிவாற்றல் என்பது நாட்டின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குச் சுதந்திரமாகப் பரவ வேண்டும் என்பதே அவரது கனவு.

அதையே அவர்,

> காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்
> காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி
> செய்வோம்.

என்றார்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் கூட தேசிய ஒருமைப்பாட்டிற்கான கருவியாக மாற வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையே இதில் வெளிப்படுகிறது. வடக்கும் தெற்கும் ஒன்றுக்கொன்று அறிவையும், கவிதையையும், வலிமையையும் பகிர்ந்து வளர வேண்டும் என்பதே அவரது பார்வை. இது நாட்டின் ஒற்றுமையுணர்வையே மேலும் வலியுறுத்துகிறது.

முன்னேற்றம், தொழில், கல்வி ஆகியவை பாரதியின் தேசியக் கனவு. பாரதியின் தேசிய உணர்வு, கடந்த காலத்தைப் புகழ்ந்து பேசுவதில் மட்டும் நின்றுவிடவில்லை. தொழிற்சாலைகள், கல்வி, அறிவியல், கப்பல் தொழில் மற்றும் தன்னிறைவு கொண்ட இந்தியாவை அவர் கனவு கண்டார்.

அவர் பாடிய **ஆலைகள் வைப்போம்; கல்விச் சாலைகள் வைப்போம்.** என்கிற கவிதை அதையே வலியுறுத்துகிறது.

அவரது தேசியக் கண்ணோட்டம், வறுமையையோ, பலவீனத்தையோ அல்லது நிரந்தர சார்புநிலையையோ போற்றவில்லை. அதற்கு மாறாக, உற்பத்தி, கல்வி, துணிச்சல், அறிவியல் முன்னேற்றம், தேசியத் திறன் ஆகியவையே வலிமையான தேசத்தின் அடித்தளங்கள் என்று அவர் தம் பாடல்கள் மூலம் தொடர்ந்து வலியுறுத்தினார்.

பாரதியைப் பொறுத்தவரை, கலாச்சாரப் பாரம்பரியம் என்பது கடந்த காலத்தில் சிக்கிக்கொள்வதற்கான காரணமல்ல; எதிர்காலத்தை வெல்வதற்கான தன்னம்பிக்கையின் ஊற்றாகும்.

அதனால்தான் நாட்டின் ஒற்றுமைக்கு பாதிப்பாக இருக்கக் கூடிய சாதிய வேற்றுமைகளை அவர் கடுமையாகச் சாடினார். தேசிய முன்னேற்றத்திற்கு மிகப்பெரிய தடையாக சாதிகள் இருக்கும் என்பதனால் தான் அவர்,

> **எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓரினம்,**
> **எல்லாரும் இந்திய மக்கள்.**

என்று முழங்கினார்.

அவரது இந்தியா, சமத்துவம், மனித கண்ணியம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய தேசிய உணர்வு ஆகியவற்றின் மீது கட்டியெழுப்பப்பட வேண்டிய தேசமாக இருந்தது.

80 ஆண்டு கால சுதந்திர இந்தியாவிற்கு பின்னும்

## ஏன் மகாகவி நமக்கு பொருத்தமானவர்?

தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் இடையே சந்தேகத்தையும் பிரிவினையையும் உருவாக்கும் எந்த சித்தாந்தத்திற்கும் பாரதி எளிதில் பொருந்துவதில்லை.

இந்தியாவைத் தழுவுவதால் தமிழ் மொழியின் அடையாளம் குறைவதில்லை. மாறாக, பிராந்தியப் பெருமையிலிருந்து தேசிய வலிமைக்கான உயர்வை அது அடைகிறது என்ற செய்தியை பாரதி தொடர்ந்து தன் எழுத்துக்களால் வலியுறுத்துகிறார்.

### பாரதியின் அழியாத செய்தி

பாரதியின் செய்தி மிகவும் தெளிவானது.

**பாரதம் இல்லாத தமிழ்ப் பெருமை அரசியல் ரீதியாகச் சுருங்கிவிடும்; தமிழ் நாகரிகம் இல்லாத இந்திய தேசியம் கலாச்சார ரீதியாக முழுமையடையாது.** இரண்டிற்கும் இடையில் ஒன்றைத் தேர்ந்தெடுக்குமாறு அவர் தமிழர்களை என்றுமே கேட்டதில்லை.
தமிழின் வழியாக அவர் பாரதத்தை விழிப்புணர்வடையச் செய்தார்; பாரதத்தின் வழியாக தமிழுக்கு அழியாத தேசியக் குரலை வழங்கினார். தமிழ்ப் பெருமையும் பாரதிய தேசியமும் எதிரெதிரான அடையாளங்கள் அல்ல; ஒன்றை ஒன்று நிறைவு செய்யும் இரு பரிமாணங்கள் என்பதே பாரதியின் அழியாத பாரம்பரியமாகும்.

# பொதுத்தேர்வு நடைமுறைகளில் மோடி அரசு படைத்த புதிய வரலாறு!

நம் நாட்டில் இவ்வாண்டு நீட் தேர்வின் நேர்மையும் நம்பகத்தன்மையும் பாதிக்கப்பட்ட அசம்பாவித சம்பவம் ஒன்று சில மாதங்களுக்கு முன்பாக நிகழ்ந்தது. அந்த சூழலை பாரதப்பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் அரசு எப்படி கையாண்டது? நடந்து விட்ட தவறினை மக்களிடமிருந்து ஒளித்தோ மறைத்தோ வைக்கவில்லை. உடனடியாக தேர்வு நடைமுறைகளை முறைப்படுத்தினார்கள். பொதுத்தேர்வுகளை, அதன் மீதான நம்பிக்கைகளை சரி செய்யும் பொருட்டு சிறப்பான ஒரு மறுமலர்ச்சிப் பாதையினை தேர்ந்தெடுத்து அதனை வெற்றிகரமாகச் செயல்படுத்தவும் தொடங்கி விட்டார்கள். இந்த முன்னெடுப்பு ஒரு இனிய வரலாறு!

## அடித்தளம் எப்போது?!

சொல்லப் போனால், பொதுத்தேர்வு நடைமுறைகளை சீர்படுத்தும் ஒரு சட்ட திட்டம் 2024ம் ஆண்டே மோடி அரசால் உருவாக்கப்பட்டு விட்டது. இது தான் முதல் பிள்ளையார் சுழி. பொதுத்தேர்வுகளில் முறைகேடுகளைத் தடுக்கும் சட்டம் (Public Examinations (Prevention of Unfair Means) Act) 2024 பிப்ரவரி மாதத்தில் இயற்றப்பட்டு, 2024 ஜூன் 21 முதல் அமலுக்கு வந்தது. சட்டம் அமலுக்கு வந்த அடுத்த நாளே டாக்டர் கே. ராதாகிருஷ்ணன் தலைமையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இக்குழு அளித்த 101 ஆலோசனைகளில் 57 வரை செயல்படுத்தப்பட்டு விட்டது.

## மறு தேர்வு அறிவிப்பு!

மே 3, 2026ல் நடைபெற்ற நீட் தேர்வில், முன்கூட்டி வினாத்தாள்கள் கசிந்த விவகாரம் வெளிப்பட்ட-துமே அத்தேர்வு உடனடியாக ரத்து செய்யப்பட்டது. அடுத்த தேர்வு எப்போது எவ்விதம் நடைபெறுமோ என அச்சத்தில் இருந்த மாணவர்களுக்கு நல்ல செய்தியாக மறுதேர்வு அடுத்த மாதமே நடைபெறும் என அறிவித்தது மோடி அரசு. அது மட்டுமின்றி, மே மாதத் தேர்வுக்காக செலுத்தப்பட்ட தேர்வுக்கட்டணம் முழுமையாகத் திருப்பித் தரப்படும் என்றும், மறுதேர்வுக்கு கூடுதல் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படாது என்றும் அறிவிக்கப்பட்டது.

## சிபிஐ கிடுக்கிப்பிடி!

தேர்வு ரத்து செய்யப்பட்ட அதே தினத்தில், குற்ற வழக்கு விசாரணை நாட்டின் உயரிய புலன்விசாரணை மையமான சிபிஐ வசம் ஒப்படைக்கப்பட்டது. சிறப்பு விசாரணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு குற்றவியல் வலையமைப்பு இறுகியது. குற்றவாளிகள் கடும் விசாரணை வளையத்திற்குள் சிக்கினர். இதையொட்டி வினாத்தாளின் மூலத்தை கண்டறிவதிலிருந்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் நிலை வரை சிபிஐ விசாரணை விறுவிறுவென முன்னேறியது. மே 27 ஆம் தேதிக்குள், 49 இடங்களில் சோதனை நடத்திய சிபிஐ, குற்றத்தில் ஈடுபட்டதாக 13 நபர்களை கைது செய்தது. வேதியியல், உயிரியல் மற்றும் இயற்பியல் வினாத்தாள்களின் கசிவுக்கான மூலச்சங்கிலியை வெகு வேகமாகவும் வெற்றிகரமாகவும் கண்டறிந்தது சிபிஐ.

## மறு தேர்வு ஏற்பாடுகளும், மகிழ்ச்சியும்!

இதற்கிடையே நீட் மறுதேர்வுக்கான ஏற்பாடுகள் முறையாகவும் முழுமையாகவும் செய்யப்பட்டன. 22 லட்சத்திற்கும் அதிகமாக நீட் தேர்வு எழுத ஏற்கனவே பதிவு செய்திருந்த மாணவர்களுக்காக நாடு முழுவதும் ஜூன் மாதமே மறுதேர்வு நடத்தப்பட்டது. இந்த மறுதேர்வுக்காக இரண்டு லட்சத்திற்கும் அதிகமான பாதுகாப்பு மற்றும் நிர்வாகப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். மறுதேர்வு பாதுகாப்பான முறையில் நடத்தப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, 1,38,560 **CCTV** கேமராக்கள் மற்றும் 51,311 ஜாமர்கள் **(Jammers)** தேர்வு மையங்களில் பொருத்தப்பட்டன. வினாத்தாள் போக்குவரத்து, அதற்கான வாகனங்களில் அமைக்கப்பட்டிருந்த **GPS** மூலம் தீவிரமாக கண்காணிக்கப்பட்டது.



மிகுந்த பாதுகாப்புடன் ஜூன் 21 அன்று நடத்தப்பட்ட இந்த மறுதேர்வு உச்சபட்ச ஜனநாயக செயலாக பார்க்கப்பட்டு மாணவர்களையும் பெற்றோர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. அதை விட பெருத்த மகிழ்ச்சியாக ஒரு மாத காலத்திற்குள்ளாக மறுதேர்வின் முடிவுகளை ஜூலை 16 அன்றே வெளியிட்டு, நாட்டு மக்களின் நெஞ்சங்களில் பால் வார்த்தது மோடி அரசு.

மேலும், அடுத்த ஆண்டு முதல், நீட் தேர்வு முழுமையாக கணினி வழித்தேர்வு எனும் **Computer-Based Test (CBT)** முறைக்கு மாற்றப்படும் எனவும் மத்திய கல்வி அமைச்சர் அறிவித்தார்.

## பிரதமர் ஆற்றிய பெரும்பங்கு!

நீட் தேர்வின் நம்பகத்தன்மைக்கு ஒரு பாதிப்பு ஏற்பட்ட தருணத்தில், பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் தனிப்பட்ட முறையில் செய்த செயற்கரிய செயல்கள் அனைவரையும் வியக்க வைக்கும். இது குறித்து Gen Z தலைமுறையினருக்காக அவர் தொடர்ந்து வெளியிட்ட இன்ஸ்டாகிராம் காணொளிகள் உலக சாதனை எனும் அளவில் பெரும் வரவேற்பையும் பெற்றது. செய்தித்தகவல்களின் படி, வினாத்தாள் கசிவுக்கு எதிரான பிரதமரின் இன்ஸ்டா காணொளி 24 மணி நேரத்தில் 303 மில்லியன் பார்வைகளை பெற்றது.

மாணவர்களும், பெற்றோரும், மற்றோரும் தனது இன்ஸ்டா பக்கங்களில் வழங்கிய ஆலோசனைப் பதிவுகளுக்காக, அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக மற்றொரு சிறப்புக்காணொளியையும் பிரதமர் வெளியிட்டார்.

## புதிய சட்டம் தரும் நிரந்தர நிம்மதி!

மோடி அரசின் நடவடிக்கைகளில் மிக முக்கியமான அம்சம், வினாத்தாள் கசிவைத் தடுக்கும் சிறப்பு மசோதாவையும் சட்டமாக்கியது. இந்த நடவடிக்கை ஒரு தேர்வை ரத்து செய்ததோடு மட்டும் நின்றுவிடவில்லை. அரசின் மிக முக்கியமான, இனி காலம் முழுவதும் பயன் தரக்கூடிய ஒரு நீண்டகால நடவடிக்கை சட்டரீதியில் கொண்டு வரப்பட்டது.

ஆம். தனிப்பட்ட முறையில் பொதுத்தேர்வு முறைகேடுகளில் ஈடுபட்டால் கடுமையான தண்டனைகள் (5 முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் அதிகபட்சம் ₹50 லட்சம் அபராதம். குழுவாக குற்றத்தில் ஈடுபட்டால் இன்னமும் அதிகம்) விதிக்கப்படவும், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அவ்வழக்குகள் விசாரிக்கப்படவும், நாடு முழுவதும் இதற்கென விரைவு நீதிமன்ற அமைப்பை உருவாக்கவும் புதியதொரு சட்டத்தினை வெறும் நான்கே நாட்களில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது, மோடி அரசு.

இது ஒரு மிக முக்கியமான நடவடிக்கையாகக் கருதப்படுகிறது. காரணம், நாடு முழுவதும் வலுவானதொரு பாதுகாப்பு அமைப்பை இந்த சட்டம் பொதுத்தேர்வுகளுக்கு கொண்டு வரும் என பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதை விடவும் சிறப்பானதொரு ஹைலைட் இச்சம்பவத்தில் உண்டு. விசாரணைகளுக்கு காலக்கெடு நிர்ணயித்து பொதுத்தேர்வு குற்றங்களுக்காக தனிப்பட்ட நீதிமன்ற நடைமுறையை உருவாக்கியதோடு மாத்திரம் மோடி அரசு நின்று விடவில்லை.



# புதிய நிபுணர்கள் குழு

கடந்த ஜூலை மாத இறுதியில், பொதுத்தேர்வு நடைமுறைகளை தீர்மானிக்கும் நிபுணர்கள் குழுவிலும் மாற்றம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் இணைநிறுவனரான நந்தன் நீலேகனி தலைமையில் உயர்மட்ட பணிக்குழு அமைக்கப்பட்டு, நாட்டின் வெவ்வேறு தளங்களில் புகழ் பெற்று விளங்கும் தலைசிறந்த அறிஞர்கள் இக்குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள். சென்னை ஐஐடி நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் வி. காமகோடி உட்பட ஏழு நிபுணர்களோடு இக்குழு புதிய வடிவமைப்பினை பெறுகிறது.

தவிர, ஜூலை 28 அன்று, 360 சாட்சிகள், 422 ஆவணங்கள் மற்றும் 43 முக்கிய ஆதாரப் பொருட்களின் அடிப்படையில், இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட 13 பேருக்கும் எதிராக சிபிஐ குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருக்கிறது. வெகு விரைவில் இவ்வழக்கில் நீதி கிடைக்கப் போவதும் குற்றவாளிகள் தண்டனை அடைவதும் உறுதி.

ஆக மொத்தத்தில், நாட்டு மக்களின் நலன் ஒன்றே முக்கியம் என நாள்தோறும் கண் துஞ்சாது செயல்படும் நம் பாரதப்பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் Gen Z தலைமுறையினருக்காக புதியதொரு தேர்வுப் பாதையினையே வடிவமைத்து பிரம்மாண்ட வரலாறு படைத்திருக்கிறார் என்று தான் சொல்ல வேண்டும்.



# பிரதமர் மோடியின் ஆத்மார்த்த திருக்குறள் நேசம்!

பிரதமர் நரேந்திர மோடியைப் பொறுத்தவரை, திருக்குறள் என்பது வெறும் தமிழ்நாட்டின் ஒரு செம்மொழி இலக்கியம் மட்டுமல்ல...
அது அழியாத தமிழில் ஒலிக்கும் பாரதத்தின் நாகரிக ஞானம்.




செங்கோட்டையிலிருந்து லடாக் வரை, சென்னை முதல் கன்னியாகுமரி வரை, பாங்காக் முதல் பாரிஸ் வரை, சிங்கப்பூர் முதல் கொழும்பு வரையிலும் ஆட்சி நிர்வாகம், ராஜதந்திரம், தேசியப் பாதுகாப்பு, நீர் மேலாண்மை, கல்வி, வேளாண்மை, மருத்துவம் மற்றும் நட்பு போன்ற பல்வேறு துறைகள் குறித்து பிரதமர் மோடி உரையாற்றிய தருணங்களில், வள்ளுவரின் குறள்களை உலக அரங்குகளுக்குக் கொண்டு சென்றுள்ளார். இந்த அவரின் திருக்குறள் பற்று வெறும் வெளிப்படையான பாராட்டோ, தேர்தல் அரசியலோ அல்ல.

லடாக்கில் பணியாற்றும் வீரர்களிடம், உலக நாடுகளின் தலைவர்களிடம், விஞ்ஞானிகள், மருத்துவர்கள்,



திருவள்ளுவர் தமிழ்நாட்டுக்குச் சொந்தமானவர்தான். ஆனால், அவரது ஞானம் மனிதகுலம் முழுவதற்கும் சொந்தமானது.

விவசாயிகள், இளம் விளையாட்டு வீரர்கள் என பல்வேறு தரப்பினரிடம் திருக்குறளை மேற்கோள் காட்டும் ஒரு தலைவர், ஒரு ஆழமான தேசிய உண்மையை வெளிப்படுத்துகிறார்: தமிழ் நாகரிகம் பாரதத்தின் விளிம்பில் இல்லை; அதன் இதயத்தில் உள்ளது என்பதே அது!

பல தசாப்தங்களாக, பிரிவினை அரசியல் செய்து வந்த சிலர், தமிழர் அடையாளத்தை இந்தியாவிற்கு எதிரான ஒரு குறுகிய அரசியல் சட்டகத்திற்குள் அடைத்துவைக்க முயன்றனர். திருக்குறளை உலக அரங்குகளில் எடுத்துரைப்பதன் மூலமும், அதன்மொழிபெயர்ப்புகளை ஊக்குவிப்பதன் மூலமும், தமிழ்ப் பெருமையும் இந்திய தேசிய உணர்வும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல; அவை ஒரே நாகரிக ஆன்மாவின் பிரிக்க முடியாத இரு வெளிப்பாடுகள் என்பதை அவர் எடுத்துக்காட்டியுள்ளார். இதன் மூலம் செயற்கையான இருமுனைச் சிந்தனையையும் சேர்த்தே பிரதமர் மோடி உடைத்தெறிந்துள்ளார்.

பிரதமரின் திருக்குறள் மேற்கோள்கள் அவரது இலக்கிய ரசனை விருப்பங்களையும் தாண்டிய ஒரு ஆத்மார்த்த மரியாதை. சொல்லப் போனால், அது ஒரு கலாச்சார ராஷ்டிர சேவை... பண்டைய தமிழின் அழியாத குரலாக, எழுச்சியுற்ற, ஒருங்கிணைந்த, தன்னம்பிக்கை மிக்க பாரதத்தின் வழியாக, தலைமுறை தலைமுறையாக உலகெங்கும் ஒலிக்கச் செய்யும் உறுதியான தேசியப் பணியாகும்.

# மோடி அரசின் செமிகண்டக்டர் புரட்சி!

மத்தியில் பாரதிய ஜனதா ஆட்சி அமையும் முன்பு வரையிலும், வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் சிப்களுக்கு சந்தையாகவும், சிப் வடிவமைப்புக்கான மையமாகவும் தான் இந்தியா இருந்து வந்தது. அந்த நிலையிலிருந்து பாரதப் பிரதமர் மோடியின் தலைமையில் 2014ல் ஆட்சி அமைந்ததும், முழுமையான செமிகண்டக்டர் மதிப்புச் சங்கிலியை உருவாக்கும் நாடாக இந்தியா முன்னேறியுள்ளது. அதாவது, சிப் வடிவமைப்பில் தொடங்கி சிலிக்கான் உற்பத்தி (Fabrication), அசெம்பிளி, சோதனை, பேக்கேஜிங், உற்பத்தி உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்கள் தயாரிப்பு, திறமையான மனிதவளம் ஆகிய அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த செமிகண்டக்டர் சூழலமைப்பை இன்று இந்தியா வெற்றிகரமாக உருவாக்கியிருக்கிறது.

இந்த அசகாய புரட்சி, எவ்விதம் துவங்கி எதை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்பதற்கான விளக்கமே இக்கட்டுரை.




**பாரதப் பிரதமர் மோடியின் தலைமையில் 2014ல் ஆட்சி அமைந்ததும், முழுமையான செமிகண்டக்டர் மதிப்புச் சங்கிலியை உருவாக்கும் நாடாக இந்தியா முன்னேறியுள்ளது. இந்த அசகாய புரட்சிப்பயணம், எவ்விதம் துவங்கி எதை நோக்கி சென்று கொண்டிருக்கிறது?!**

**2014 - 2020 :** மின்னணு சாதனங்கள் மற்றும் மொபைல் போன் உற்பத்தி தேவைகள் இந்தியா மட்டுமின்றி உலக நாடுகள் பூராவிலும் அதிகமாய் விரிவடைய, அவற்றுக்கான செமிகண்டக்டர் சிப்களுக்கான உள்நாட்டு சந்தையும் இந்தியாவில் பெரிதாக உருவானது. இதற்கான முன்னேற்பாடுகளும், திட்டங்களும் தீட்டப்பட்ட காலம் இவை.

**2021 :** திட்டமிட்ட தேசிய முயற்சியாக **'Semicon India'** திட்டம் தொடங்கப்பட்டது. இதற்காக ₹76,000 கோடி ஒதுக்கப்பட்டதுடன், தகுதி பெறும் திட்டங்களுக்கு 50% வரை நிதி ஆதரவு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

**2023 :** முதல் முக்கிய முதலீட்டாளர்

குஜராத்தின் சானந்தில் அமைக்கப்படும் **Micron** நிறுவனத்தின் **ATMP (Assembly, Testing, Marking & Packaging)** திட்டத்திற்கு முதன்முதலாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அதன் பணிகள் தொடங்கப்பட்டன. இதன் முதலீடு: ₹22,516 கோடி. இங்கு 2026 பிப்ரவரி மாதம் முதல் வணிக உற்பத்தியும் ஏற்றுமதியும் தொடங்கி விட்டது.

**2024 :** சிலிக்கான் உற்பத்தித் திட்டங்கள் நனவாகத் தொடங்கின

குஜராத்தின் தோலேராவில் **Tata-PSMC** நிறுவனத்தின் சிலிக்கான் சிப் உற்பத்தி ஆலைக்கும், அசாமின் மோரிகானில் டூவய கூளுஹூ நிறுவனத்தின் செமிகண்டக்டர் அசெம்பிளி மற்றும் சோதனை மையத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. குஜராத்தின் தோலேராவில் ₹91,526 கோடியில் உருவாகும் இந்தியாவின் முதல் வர்த்தக சிலிக்கான் சிப் ஆலை **(Silicon Fab)**, 2028 முதல் மாதத்திற்கு 50,000 வேஃபர்களை உற்பத்தி செய்யும். அசாமின் மோரிகானில் **Tata TSAT** நிறுவனம் ₹27,000 கோடியில் **Flip-Chip** தொழில்நுட்பங்களுடன் தினமும் 4.8 கோடி சிப்களை உற்பத்தி செய்யும் திறனுடன் அமைக்கப்பட்டு வருகிறது.

**2025 :** தொழில்நுட்ப விரிவாக்கம்

நாட்டின் முதல் 3 நானோமீட்டர் சிப் வடிவமைப்பு மையங்களாக **Silicon Carbide (SiC)** தொழில்நுட்பமும், மேம்பட்ட கண்ணாடி அடித்தள **(Advanced Glass Packaging)** திட்டங்களும் அங்கீகரிக்கப்பட்டு தொடங்கப்பட்டன. இதையொட்டி, ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் சுமார் ₹4,009



கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கூடுதலாக பஞ்சாப் மற்றும் ஆந்திரபிரதேசத்திலும் செமிகண்டக்டர் தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

பல்கலைக்கழகங்களிலும் சிக்கலான சிப் வடிவமைப்பு பயிற்சி வழங்கப்படுகிறது. இதுவரை சுமார் 68,000 மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். 105 ஸ்டார்ட்அப்கள் மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு **(MSMEs)** மேம்பட்ட **EDA** வடிவமைப்புக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. உ.பி.-யின் ஜேவரில் **HCL–Foxconn** நிறுவனம் ₹3,700 கோடியில் மொபைல், லேப்டாப், கார் மற்றும் டிஸ்ப்ளே சாதனங்களுக்கான டிரைவர் சிப்களை உற்பத்தி செய்யும் ஆலையை அமைக்க 2025-ல் ஒப்புதல் வழங்கப்பட்டது.

**2026 :** உற்பத்தியும், தொடர்ச்சியான முன்னேற்றமும்

இந்தியாவின் மூன்று நிறுவனங்கள் பெருமளவில் வணிக உற்பத்தியைத் தொடங்கின. **Micron, Kaynes** மற்றும் **CG Semi** ஆகிய நிறுவனங்கள் வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கியிருப்பது, இந்தத் திட்டம் அறிவிப்புகளைத் தாண்டி நடைமுறையில் வெற்றிபெற்றிருப்பதற்கான மிகத் தெளிவான ஆதாரமாகும்.

**Kaynes Semicon** நிறுவனம் ₹3,307 கோடி முதலீட்டில், மேம்பட்ட அறிவார்ந்த மின்சக்தி தொகுதிகளை **(Advanced Intelligent Power Modules)** உற்பத்தி செய்யத் தொடங்கியது. **ISM** திட்டத்தின் ஆதரவுடன் வணிக உற்பத்தியைத் தொடங்கிய இரண்டாவது நிறுவனம் இது.

செமிகான் 2.0 திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. முதல் கட்டத்தின் ₹76,000 கோடியைத் தொடர்ந்து ₹1,27,500 கோடி மதிப்பிலான இரண்டாம் கட்ட **Semicon** 2.0 திட்டம் அறிவிக்கப்பட்டிருப்பது, இந்தத் துறையில் மத்திய அரசுக்கு உள்ள நீடித்த கொள்கை உறுதிப்பாட்டினை வெளிப்படுத்துகிறது.

அடுத்த தலைமுறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு

இந்தியாவின் முதல் 3 நானோமீட்டர் சிப் வடிவமைப்பு மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே ஆராய்ச்சிகள் நிகழ்த்தி உருவாக்கப்பட்ட **DHRUV64** மற்றும் **VIKRAM3201** போன்ற உள்நாட்டு செயலி **(Processor)** திட்டங்கள் இந்தியாவின் சுயசார்பு திறனை வலுப்படுத்துகின்றன.

உலகளாவிய ஒத்துழைப்பும், மோடி அரசின் தீவிரமும்

அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் இந்தியாவின் செமிகண்டக்டர் துறைக்கு தங்களது ஒத்துழைப்பை விரிவுபடுத்தியுள்ளன. மென்பொருள் வடிவமைப்பில் துவங்கிய சிலிக்கான் பயணத்தில், மோடி அரசின் 'ஆத்மநிர்பர் பாரத்' திட்டம் தற்போது அதன் உச்சக்கட்ட தொழில்நுட்பத்தை எட்டியுள்ளது. ஒரே ஒரு அடையாளத் தொழிற்சாலையுடன் நிற்காமல், அறிவுசார் சொத்துரிமை, இயந்திரங்கள், மூலப்பொருட்கள் மற்றும் பெருமளவு உற்பத்தி என ஒரு முழுமையான செமிகண்டக்டர் சூழலமைப்பை உருவாக்குவதே மோடி அரசின் நோக்கம்; இதில் இந்தியா அதிவேகமாக முன்னேறி வருகிறது.

இது இன்னும் முழுமையான தன்னிறைவு அல்ல. ஆனால், செமிகண்டக்டர் துறையில் இந்தியா இதுவரை உருவாக்கியிருக்கும் அடித்தளம் என்பது உலக நாடுகளே இன்று உற்று கவனிக்கும் ஒரு முன்னோக்கிய வெற்றிப்பயணம் என தாராளமாக கொண்டாடலாம்!

> “எனது மதம் எனக்கு கற்று கொடுத்ததை, எத்தனை தமிழ் படித்தாலும் தெரிந்து கொள்ள முடியாது”
>
> – நா. மரிய வில்சன், தமிழ்நாடு நிதித்துறை அமைச்சர்



## தமிழக பாஜக தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் அவர்களின் பதிலடி

எம் தமிழ் மொழியின் ஆளுமையுடன், ஒரு மதத்தை ஒப்பிட்டு பேசுவது சரிதானா அமைச்சர் திரு. மரிய வில்சன் அவர்களே?

இன்றைய சட்டமன்றத்தில் உங்கள் மொழியாற்றல் மீதான விவாதத்தின் போது, “எனது மதம் எனக்கு நிறைய கற்றுக் கொடுத்திருக்கிறது” என்பதோடு நீங்கள் நிறுத்தியிருந்தால் அது உங்களின் தனிப்பட்ட அனுபவம். ஆனால், “எனது மதம் எனக்கு கற்று கொடுத்ததை, எத்தனை தமிழ் படித்தாலும் தெரிந்து கொள்ள முடியாது” என்று நீங்கள் கூறுவது, தமிழின் மீதான தாக்குதலாகத் தான் தெரிகிறது.

“அன்பு” என்ற வார்த்தைக்கு பல மதங்கள் கற்பித்த பல அர்த்தங்களை, "அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்” என்ற ஒற்றை வரியில் தூக்கி சாப்பிட்ட மொழி தான் நம் தாய் மொழி தமிழ்.

“வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்” என்ற வள்ளலாரின் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை விட, இரக்கத்தைப் பற்றி இவ்வுலகில் வேறு யாரால் நுட்பமாக எடுத்துரைக்க முடியும்?

“தீதும் நன்றும் பிறர் தர வாரா” என்ற புறநானூற்றுப் பாடலை நீங்கள் சரியாக படித்து புரிந்திருந்தாலே, “அமைதி” என்ற வார்த்தைக்கு தமிழ் மொழியில் உள்ள ஆழமான அர்த்தம் உங்களுக்கு தெரிந்திருக்கும்.

பிறப்பால் நீங்கள் எந்த மதத்தைச் சார்ந்தவராக வேண்டுமானாலும் இருக்கலாம், ஆனால், உணர்வால் நாம் அனைவரும் தமிழர்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இன்றைய சட்ட மன்றத்தில் கூட உங்கள் கட்சி தலைமையும் அதைத் தானே சுட்டிக்காட்டினார்? அப்படியிருக்கையில் உங்கள் மதத்தை நீங்கள் உயர்த்திப் பிடிப்பதில் தவறில்லை. ஆனால், தமிழ் மொழியை நீங்கள் தாழ்த்துவதை ஒரு போதும் எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே, இன்று உணர்ச்சி மிகுதியில் தமிழ் மொழி மீது வைத்த தவறான விமர்சனத்திற்கு நீங்கள் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும்!





# நாடாளுமன்றத்தின் ‘பளிச்’ உரைகள்!



டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி
ஜூலை 6, 1901 - ஜூன் 23, 1953

நம் நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்து இது 80-வது வருடம். குடியரசானதிலிருந்து இந்திய நாடாளுமன்றம் மகிழ்ச்சி, துக்கம், சவால்கள், எமர்ஜென்சி, கொள்கை மாறுபாடுகள், வளர்ச்சித் திட்டங்கள் என பல வரலாற்றுத் தருணங்களைக் கண்டிருக்கிறது. அதே அரங்கு, வரலாற்றில் நிலைத்த அருமையான உரைகளையும் சுவாசித்திருக்கிறது.

அத்தகைய ஆழமான உரைகளிலிருந்து சிலவற்றை நம் வாசகர்களுக்காக தொடராக வழங்குகிறோம்.

முதல் அத்தியாயத்தில், சியாமா பிரசாத் முகர்ஜி காஷ்மீர் குறித்து 1952 ஆகஸ்ட் 7-ஆம் தேதி மக்களவையில் ஆற்றிய உரையிலிருந்து ஐந்து முக்கிய பகுதிகள்.

### 1. ஒரே இறையாண்மை கொண்ட பாராளுமன்றம்

"ஷேக் அப்துல்லா, இந்தப் பாராளுமன்றத்தின் இறையாண்மையை ஏற்றுக்கொள்கிறார் என்று வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். இந்தியாவில்



இரண்டு இறையாண்மை கொண்ட பாராளுமன்றங்கள் இருக்க முடியாது. நீங்கள் காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்கிறது என்று கூறுகிறீர்கள். ஆனால், ஷேக் அப்துல்லா காஷ்மீருக்கு தனி இறையாண்மை கொண்ட பாராளுமன்றம் வேண்டும் என்று கூறுகிறார். இது ஒன்றுக்கொன்று பொருந்தாததும், முரண்பாடானதுமாகும்."

### 2. இரண்டு பிரதமர்கள் இருக்க முடியாது



"இந்தியாவிற்கு காஷ்மீரையும் உள்ளடக்கி ஒரே ஒரு பிரதமர் மட்டுமே உள்ளார் என்பதை நாங்கள் அறிவோம். அவர் இங்கே அமர்ந்திருக்கிறார். டெல்லியில் ஒரு பிரதமரும், ஸ்ரீநகரில் இன்னொரு பிரதமரும் இருப்பது எப்படி சாத்தியமாகும்?"

### 3. அரசியலமைப்பு புனிதமானது

"அரசியலமைப்புச் சட்டத்திற்குட்பட்ட முறையிலேயே செயல்படுங்கள்; அரசியலமைப்புடன் விளையாடாதீர்கள். அது ஒரு புனிதமான ஆவணம். மிகுந்த உழைப்பும் ஆழ்ந்த சிந்தனையும் செலுத்தி உருவாக்கப்பட்ட ஆவணம் அது."

### 4. ஒரே இந்தியா - அனைவருக்கும் சம உரிமை

"இந்தியா என்பது பெயரளவில் மட்டுமல்ல, நடைமுறையிலும் இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் அனைத்து சமூகத்தினரும் எந்த அச்சமுமின்றி, சம உரிமைகளுடன் வாழக்கூடிய நாடு என்பதை நாம் நிரூபிக்க வேண்டும்."

### 5. ஜம்மு மற்றும் லடாக்கின் விருப்பம்



"ஜம்முவும் லடாக்கும், ’இந்த அனைத்து விஷயங்களுடனும் நாங்கள் இந்தியாவுடன் இணைய விரும்புகிறோம்’ என்று கூறினால், அதற்கான வாய்ப்பை அவர்களுக்கு வழங்க வேண்டும். காஷ்மீருக்காக நீங்கள் கோரும் அதே உரிமையை, ஜம்மு மற்றும் லடாக் மக்களும் கோரக்கூடும்."

**ஆதாரம்:**

மக்களவை விவாதங்கள், 7 ஆகஸ்ட் 1952, "காஷ்மீர் மாநிலம் தொடர்பான தீர்மானம்", பத்திகள் 5885 - 5899.

மேலும், டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி, Eminent Parliamentarians Monograph Series, மக்களவைச் செயலகம், புது தில்லி, 1990, பக்கங்கள் 109 - 123.

தமிழகத்தில் தவெக ஆட்சி அமைத்து தாக்கல் செய்திருக்கும் முதல் பட்ஜெட், 5 ஆகஸ்டு, 2026 அன்று. இது ஏற்கனவே சென்ற திமுக அரசு இவ்வருடம் தாக்கல் செய்திருந்த பட்ஜெட்டின் திருத்தப்பட்ட வடிவம். இதன் சில முக்கிய பொறுப்புக்கூறல் அம்சங்களை அலசிப் பார்க்கையில், கிடைக்கும் பதில் என்னவோ ஏமாற்றம்தான். இருந்தாலும் நம் அலசலை பொதுவெளியில் பிழிந்து காயப் போட்டால்தானே மக்கள் மத்தியில் வெளுத்ததாக ஆகும்?! அந்த தலையாய கடமையினை செய்கிறோம்.

**1. ₹1.22 லட்சம் கோடி புதிய கடனும், தெளிவில்லாத பொருளாதார இலக்கும்?!**

மாநிலத்தின் கடன் ₹10 லட்சம் கோடியைத் தொட்டு நிதிநிலை தள்ளாடும் வேளையில், கடனைக் கட்டுப்படுத்த எந்த வழிகாட்டலும் இல்லை. மாறாக, நடப்பாண்டில் மேலும் ₹1.22 லட்சம் கோடி கடன்! "அடுத்த 50 ஆண்டுகளுக்குக் கடன் குறைய வாய்ப்பில்லை" என நிதித்துறை செயலாளரும் கைவிரித்து விட்டது பெருங்கவலை.

மறுபுறம், 2036-க்குள் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை அரசு முன்வைக்கிறது. ஆனால், அதற்கான வளர்ச்சி விகிதம், முதலீடு மற்றும் துறைவாரியான பங்களிப்பு குறித்த எந்தவொரு உறுதியான செயல்திட்டமும் இல்லை.

மலை போல வளரும் கடன்சுமை கண்முன் நிற்க, பொருளாதார இலக்கை அடைவதற்கான பாதையை அரசு எப்போதுதான் வகுக்கப் போகிறது?!

**2. ₹15,000 கோடி கூடுதல் வருவாய் கணக்கு எங்கே?!**

தொழில்நுட்பம் மூலம் வரி வசூலை மேம்படுத்தி சுமார் ₹15,000 கோடி கூடுதல் வருவாய் ஈட்டப்போவதாக அரசு மார் தட்டுகிறது. ஆனால், GST, பதிவுத்துறை, சுரங்கத்துறை என எந்தெந்தத் துறையிலிருந்து எவ்வளவு வருவாய் கிடைக்கும்? இந்த ₹15,000 கோடி என்கிற மதிப்பீடு எந்த அடிப்படையில் கணக்கிடப்பட்டது? இதற்கான எந்தவொரு சிறு விளக்கமும் இல்லை.

ஆக, எதிர்பார்ப்பு மட்டுமே கொட்டிக் கிடக்கிறதே தவிர, அதன் பின்னாலுள்ள உறுதியான கணக்குதான் எங்கு தேடினாலும் காணக் கிடைக்கவில்லை. இதுவும் காற்றில் போட்ட கணக்குதானா?!

**3. வெளிப்படைத்தன்மை பேசும் பட்ஜெட் - விவரங்கள் எங்கே?**

தவெக அரசு பதவி ஏற்றதுமே ஒப்பந்த முறைகளில் (Tender) சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு "கணிசமான செலவு மிச்சம்" ஏற்பட்டதாக அரசு கூறுகிறது. ஆனால் அதற்கான விவரங்கள் இல்லை.

அதேபோல், சிறப்புத் திட்ட அமலாக்கத் துறைக்கு ₹17,150 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதிலும், திட்டவாரியான நிதிப் பிரிப்பு, செயல்பாட்டு இலக்குகள் போன்றவை இல்லை.




**5. பள்ளிகளுக்கு மெகா அறிவிப்பு; ஒதுக்கீட்டிலோ கன சுருக்கம்?!**

10,000 அரசுப் பள்ளிகளில் தூய்மை, குடிநீர், கழிப்பறை பராமரிப்பு மற்றும் 24 மணிநேர பாதுகாப்புக்கு ஒதுக்கீடு வெறும் ₹139 கோடி. கணக்கிட்டால், ஒரு பள்ளிக்கு மாதத்திற்குச் சுமார் ₹11,583 மட்டுமே! இந்தச் சொற்பத் தொகையில் இத்தனை சேவைகளை எப்படித் தரமாக வழங்க முடியும்?! பணியாளர், ஒப்பந்த விவரங்களும் இல்லை.

அதேபோல், 3,734 பள்ளிகளுக்கான ₹2,132 கோடி மதிப்பிலான 'பள்ளி நிறைவுத் திட்டத்திற்கு' நடப்பு பட்ஜெட்டில் ஒதுக்கியதோ வெறும் ₹300 கோடி (14.1%) மட்டுமே. மீதமுள்ள ₹1,832 கோடிக்கான கால அட்டவணையும் எங்கு தேடினாலும் இல்லை!

**6. 13 லட்சம் இளைஞர்களுக்கு ₹150 கோடி - ஒருவருக்கு ₹1,154-ல் திறன் புரட்சியா?!**

12 லட்சம் கல்லூரி மாணவர்கள், 1 லட்சம் வேலைவாய்ப்பில்லாத இளைஞர்கள் என 13 லட்சம் பேருக்கு பயிற்சியளிக்கப்படுமாம். 20,000 இண்டர்ன்ஷிப் வாய்ப்புகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. இதற்கான மொத்த ஒதுக்கீடு ₹150 கோடி. அதாவது ஒருவருக்கு சுமார் ₹1,154 மட்டுமே. தவிர, பயிற்சித்தரம், தொழில் கூட்டுறவுகள் போன்றவை தெளிவாக இல்லை. ஆக, திறமையான மனிதவளத்தை உருவாக்குவதே அரசின் நோக்கம் என்பதே ஒரு கேள்விக்குறிதான்.

**7. ₹90 கோடி அறிவிப்பு - கையில் இருப்பதோ வெறும் ₹7.5 கோடி?!**

5 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும் என தடபுடலாக அறிவித்துள்ள அரசு, ₹90 கோடி மதிப்பீட்டுத் திட்டத்திற்கு நடப்பு பட்ஜெட்டில் ஒதுக்கியுள்ளதோ வெறும் ₹7.5 கோடி (8.3%) மட்டுமே!

பல ஆண்டுத் திட்டங்களுக்கு முழு நிதியும் உடனே தேவையில்லைதான்.
ஆனால், இவை எங்கு அமையும், எப்போது கட்டி முடிக்கப்படும், மீதமுள்ள ₹82.5 கோடிக்கான ஆண்டுவாரியான ஒதுக்கீடு என்ன என்பது குறித்த எந்த கால அட்டவணையும் இல்லை. வெறும் ₹7.5 கோடியை வைத்துக்கொண்டு இந்த நிலையங்கள் எப்போது நிஜமாகும்?!

**மொத்தத்தில், காற்றில் கிறுக்குவதை போல எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் போட்ட அதீத கனவு பட்ஜெட்டாக தெரிகிறது. இலக்கை அடைவதற்கான செயல்திட்டங்களோ, திட்ட இலக்குகளின் காலக்கெடுவோ, பயனாளர்களின் கணக்கோ எங்கு தேடினாலும் காணக் கிடைக்கவில்லை.**







# மனதின் குரல்...

**நிகழ்ச்சியின் 136-வது அத்தியாயத்தில் ஜூலை 26 அன்று பிரதமர் திரு நரேந்திர மோடி ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள்!**

- கார்கில் விஜய் நன்னாள்-வெற்றித் திருநாள். இந்த நாள் நமக்குள்ளே பெருமிதத்தை இட்டு நிரப்பி விடுகிறது. கார்கிலின் உயரமான சிகரங்கள், கடினமான பருவநிலை, எதிரிகளின் சவால் என அனைத்துச் சூழ்நிலைகளையும் நமது இராணுவ வீரர்கள் எதிர்கொண்ட அதே வேளையில் அவர்களுடைய நெஞ்சுரம் அனைத்துச் சவால்களையும் விட மிகப் பெரியதாய் இருந்தது.



- ஜூலை மாதம் 4ஆம் தேதி தொடங்கி தேசமெங்கும் 'மழைநீரை சேகரிப்போம்' எனும் ஒரு விசேஷமான இயக்கமும் நடைபெற்று வருகிறது. இதன்படி, மழைநீர் சேகரிப்பு, நிலத்தடிநீரின் மறுசெறிவு, பழைய நீர்நிலைகளுக்குப் புத்துயிரூட்டல் மற்றும் மரம் நடுதல் ஆகியவற்றுக்கு புதிய வேகம் அளிக்கப்பட்டு வருகிறது.

- இந்த முறை பிள்ளையார் சதுர்த்தி நன்னாளில் நம் தேசத்தின் மண்ணாலான திருவுருவச் சிலையையே உங்களது வழிபாட்டுக்கு பயன்படுத்துங்கள். உங்களுடைய இந்த முயற்சியும் கூட ஒருவகையிலே இயற்கைக்கு நீங்கள் செய்யும் வழிபாடாகும்.




- நமது இளைஞர்கள் அண்மை நாட்களில் விளையாட்டுகளில் பல அருமையான சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள். பி.வி. சிந்து, ஜப்பான் ஓப்பன் பூப்பந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற முதல் பாரத நாட்டுப் பெண்ணாக ஆகியிருக்கிறார். அவரது இந்தச் சாதனையானது ஒட்டுமொத்த தேசத்திற்கும் பெருமை சேர்த்திருக்கிறது. பாரதநாட்டுப் பெண்கள் கிரிக்கெட் அணியும் கூட லண்டனின் லார்ட்ஸ் அரங்கத்தில் தனது முதல் டெஸ்ட் ஆட்டத்தில் வென்றிருக்கிறது. இது ஒரு வரலாற்று வெற்றியாகும்.

- சில சின்ன முயற்சிகள் கூட பெரும் முக்கியத்துவம் பெறுகின்றன. கேரளத்தின் எர்ணாகுளத்தின் தெற்கு சிட்டூரில் இருக்கும் ஆசிரியரான அபிலாஷ் அவர்கள், மிகவும் வித்தியாசமான முறையிலே சமஸ்கிருதத்தை பிரபலப்படுத்தி வருகிறார். அவரது முயற்சியால், சமஸ்கிருதத்தின் எழுத்துக்களை கால்பந்தாட்டத்தில் பயன்படுத்தப்படும் சொற்களோடு இணைத்து எளிமையான வகையிலே புரியவைக்கப்படுகிறது.

- விக்ரம்-1இன் வெற்றிகரமான ஏவுதல் நாட்டுமக்கள் அனைவரின் மனங்களையும் பெருமையால் நிரப்பியது. விண்வெளித்துறையின் இந்த வரலாற்றுரீதியான கணத்தின் சாட்சிகளாக பாரத நாட்டவர்கள் நாமனைவரும் இருந்தோம். இது தனியார் துறை வாயிலாக மேம்படுத்தப்பட்ட பாரதத்தின் முதல் ராக்கெட் ஆகும்.




- இந்த மாதம்தான் இயற்பியல், வேதியியல், உயிரியல், கணிதம் ஆகியவற்றின் ஒலிம்பியாட் போட்டிகள் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் பாரதநாட்டு அணியின் செயல்பாடு அருமையாக இருந்தது. இயற்பியல் ஒலிம்பியாடில் நமது அனைத்து ஐந்து மாணவர்களும் தங்கப் பதக்கம் வென்றார்கள், பாரதம் முதல் இடத்தைப் பிடித்தது.

- காஷ்மீரின் 'வசூ' கம்பளத்தின் விசேஷ அம்சம் என்னவென்றால், கோடையிலே இது குளிர்ச்சியை அளிக்கும், குளிர்காலத்திலே வெப்பத்தைத் தரும். முதலில் இது காஷ்மீரின் ஒவ்வொரு வீட்டிலும் காணப்பட்டது. ஆனால், கடந்த சில ஆண்டுகளாக இதன் பயன்பாடு குறையத் தொடங்கியது. இந்த நிலையில் ஸ்ரீநகரின் குலாம் ஹுசேனும் அவருடைய மகளான தஞ்ஜீலாவும் ஒரு உறுதி பூண்டார்கள். இருவரும் 'வசூ' கைவினைத்திறன் பாரம்பரியத்திற்கு ஒரு புதிய வாழ்க்கை அளிக்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாக்கிக் கொண்டார்கள். இன்று 'வசூ' கம்பளங்கள் விரைவாக மக்களின் விருப்பத்தைப் பெற்று, தேசத்தின் பிற பாகங்களுக்கும் சென்று சேர்ந்து வருகிறது.

- உத்தர பிரதேசத்தின் பிஜ்நோர் மாவட்டத்தின் லகீவாலா கிராமத்தில் சுயஉதவிக் குழுவோடு தொடர்புடைய பெண்கள், 'விதுர் பிரேர்ணா சுதேசி ஹர்பல் டீ' எனும் மூலிகைத் தேநீரைத் தயாரித்திருக்கிறார்கள். இதிலே லெமன்கிராஸ் எனும் காவட்டம்புல், சீந்தில், அதிமதுரம், துளசி, பச்சை மஞ்சள், பட்டை, ஏலக்காய், சோம்பு போன்ற இயற்கைப் பொருட்கள் அடங்கியுள்ளன. இந்தத் தேநீரானது மிகக் குறைவான காலத்தில் மக்களிடம் விசேஷமான அடையாளத்தை அமைத்துக் கொண்டது.

- நாமனைவரும் நம்முடைய வாழ்க்கையின் எந்தவொரு சிறப்பான சந்தர்ப்பத்தையும் இயற்கையோடு கண்டிப்பாக இணைக்க வேண்டும். ஓர் மரத்தை உங்கள் அன்னையின் பெயரில் நடுங்கள். இன்று நடப்பட்ட ஒரு சிறிய மரக்கன்று, வரவிருக்கும் தலைமுறையினருக்கு பசுமை, தூய்மையான காற்று, அழகான எதிர்காலத்தின் மரபாக ஆகக்கூடும்.

- வரவிருக்கின்ற பண்டிகைக்காலத்தில், காதி விற்பனை மையத்தின் ஏதாவது ஒரு பொருளை, கைத்தறியோ, கைவினைப் பொருளோ, ஏதோ ஒரு பொருளைக் கண்டிப்பாக வாங்குங்கள்.



- திரிபுராவின் தேப்பர்மாவைப் போல நீங்களும் உங்களுக்கு அக்கம்பக்கத்தில் இருக்கும் பாரம்பரியமான இசைக்கருவி பற்றிய தகவல்களை சமூக ஊடகத்தில் கண்டிப்பாக பகிருங்கள். உங்களுடைய இந்த முயற்சி மற்றவர்களையும் கூட பாரம்பரியமான பாரத நாட்டு இசையோடு அவசியம் இணையச் செய்யும்.

2026 ஜூலை 8 முதல் ஆகஸ்ட் 7 வரை

# தமிழ்நாட்டிற்கு மோடி அரசு செய்தவை என்னென்ன?







14 –22 ஜூலை 2026 –

## மூன்று புதிய ஆதார் சேவை மையங்கள்

பொதுமக்களுக்கு அடையாள அட்டை தொடர்பான சேவைகள் எளிதில் கிடைக்க, சேலம், காஞ்சிபுரம் மற்றும் தஞ்சாவூரில் புதிய பிரத்யேக ஆதார் மையங்கள் திறக்கப்பட்டுள்ளன.



16 ஜூலை 2026 –

## வட சென்னை மக்களுக்கு எளிதான பாஸ்போர்ட் சேவை

கொளத்தூரில் புதிய அஞ்சலக பாஸ்போர்ட் சேவை மையம் வடசென்னைவாசிகளின் வசதிக்காக பிரத்யேகமாக திறக்கப்பட்டுள்ளது.



18 ஜூலை 2026 –

## விருதுநகர் விவசாயிகளுக்கு உலகளாவிய வாய்ப்புகள்

சம்பா மிளகாய் உற்பத்தி செய்யும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு, மிளகாய் சார்ந்த மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு ஆதரவு அளித்துள்ளது.



6 ஆகஸ்ட் 2026 –

## பழங்குடியின தொழில்முனைவோருக்குப் புதிய ஆதரவுத் திட்டம்

பழங்குடியின மக்களின் தொழில்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு வழிகாட்டி, நிதி உதவி வழங்கி ஊக்குவிக்கும் மத்திய அரசின் திட்டத்தில் 'ஸ்டார்ட்அப் தமிழ்நாடு' (Startup TN) இணைக்கப்பட்டுள்ளது.



16 ஜூலை 2026 நிலவரப்படி –

## கிராமப்புற வேலைவாய்ப்புக்கு ₹7,585.49 கோடி இடைக்கால ஒதுக்கீடு

தமிழ்நாட்டின் கிராமப்புற வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களுக்காக ₹7,585.49 கோடி இடைக்கால ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் முதல் தவணைக்கான ₹2,176.84 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.



8 ஜூலை 2026 –

## விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க பாதுகாப்பு

சந்தையில் விலை வீழ்ச்சியடைவதைத் தடுக்கும் வகையில், தமிழ்நாட்டு விவசாயிகளிடம் இருந்து 87,226 மெட்ரிக் டன் கொப்பரைத்தேங்காய் மற்றும் 96,879 மெட்ரிக் டன் தோத்தாபுரி மாம்பழங்களையும் கொள்முதல் செய்ய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



17 ஜூலை 2026 –

## மூன்று ரயில் நிலையங்கள் நவீனமயமாக்கல்

சென்னை பூங்கா (Park), சின்ன சேலம் மற்றும் குன்னூர் ரயில் நிலையங்கள், பயணிகளுக்கான மேம்பட்ட வசதிகள் மற்றும் உள்ளூர் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் கட்டமைப்புடன் புதுப்பிக்கப்பட்டுள்ளன.



1 ஆகஸ்ட் 2026 –

## முன்கூட்டியே விடுவிக்கப்பட்ட ₹4,466 கோடி நிதி

தமிழ்நாட்டின் வளர்ச்சி மற்றும் மக்கள் நலத்திட்டங்களை செம்மையாகச் செயல்படுத்தும் வகையில், மத்திய அரசின் வரி பகிர்வில் இருந்து கூடுதல் முன்பணத் தவணையாக இந்தத் தொகையை மோடி அரசு முன்கூட்டியே வழங்கியுள்ளது.



6 ஆகஸ்ட் 2026 –

## குடிநீர் கட்டமைப்புக்காக ₹96.52 கோடி

'ஜல் ஜீவன்' திட்டத்தின் கீழ், வீடுகளுக்குக் குழாய் மூலம் குடிநீர் வழங்கும் பணிகளுக்காக ₹96.52 கோடி மத்திய அரசு வழங்கியுள்ளது.

# இந்துத்துவ சிந்தனையின் எழுச்சிக் குரல்!



இந்துத்துவ சிந்தனையை ஆழமாக விதைத்த தலைவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க உரைகளையும், அவர்களின் தேசிய சிந்தனைகளையும் இப்பகுதியில் தொடர்ந்து பதிவு செய்ய உள்ளோம். பாரதத்தின் பண்பாட்டு தேசியத்தையும், தேசத்தின் முழுமையான எழுச்சியையும் வலியுறுத்திய அத்தகைய இந்துத்துவ சிந்தனையாளர்களின் உரைகள் இன்றும் நமக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கங்களாகத் திகழ்கின்றன. அப்பேர்ப்பட்ட உயர்வான தேச பக்தர்களில் ஒருவர் தான் திரு.கே.பி. ஹெட்கேவர்.

கேசவ் பலிராம் ஹெட்கேவர் எனப்படும் டாக்டர் கே. பி. ஹெட்கேவர் ராஷ்டிரிய சுயம் சேவாக் சங்கம் எனும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பினை நாக்பூரில் தொடங்கியவர். சுவாமி விவேகானந்தர் உட்பட பல்வேறு இந்து சமூக மற்றும் ஆன்மீகச் சிந்தனைகளால் கவரப்பட்டவர்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் அஜ்னி சிறையிலிருந்து விடுதலையான பிறகு, 1922 ஜூலை 12 அன்று நாக்பூரிலுள்ள வ்யங்கடேஷ் அரங்கில் டாக்டர் கே. பி. ஹெட்கேவருக்கு பொதுமக்கள் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கு அவர் பேசிய பேச்சு சுருக்கமானதாக இருந்தாலும், அதன் உள்ளார்ந்த செய்தி சமரசமற்றதாக இருந்தது.

ஒரு நூற்றாண்டைக் கடந்த பின்னரும், இந்த வார்த்தைகள் நாட்டின் இறையாண்மையை நிலைநிறுத்த உறுதியுடன் நிற்கும் ஒரு நாகரிகத்தின் அக்னிச் சுடராக இன்றும் நின்று ஒளிர்கிறது. பாரதத்தின் 80-வது சுதந்திர தினத்தை கொண்டாடும் இந்த வேளையில், சுதந்திரம் மற்றும் முழுமையான தேசிய விடுதலை குறித்த அவரது அந்த அழுத்தமான வார்த்தைகளை மீண்டும் நினைவுகூர்வோம்.

## ஹெட்கேவர் அன்று சொன்ன 3 முக்கிய கருத்துகள் காலத்துக்கும் நிற்பவை.

**01 முழுமையான சுதந்திரமே உயர்ந்த இலக்கு**

'நாம் தேசத்தின் முன் மிக உயர்ந்த இலக்கை வைக்க வேண்டும். முழுமையான சுதந்திரத்தை அடைவதை விட உயர்ந்த இலக்கு வேறு எதுவும் இருக்க முடியாது.'

**02 சுதந்திரத்தை அடையும் பாதை**

'நமது சுதந்திரப் போராட்டத்தின் வரலாறும், சுதந்திரத்தை அடைவதற்கான வழிமுறைகளும் குறித்து நன்கு அறிந்தவர்களுக்கு அவற்றைப் பற்றி நான் அறிவுரை கூறுவது பொருத்தமற்றதாக இருக்கும்.'

**03 துணிச்சல், தியாகம் மற்றும் கட்டுப்பாடு**

'ஆயினும், நமது நாட்டின் சுதந்திரத்திற்காக உயிரையே தியாகம் செய்ய வேண்டிய சூழ்நிலை வந்தாலும் நாம் ஒருபோதும் பின்வாங்கக் கூடாது. நமது இலக்கு எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும், அதே நேரத்தில் நமது மனநிலையும் சமநிலையுடனும் தெளிவுடனும் இருக்க வேண்டும்.'

டாக்டர் கே. பி. ஹெட்கேவரின் இந்தச் செய்தி, முழுமையான சுதந்திரம் என்பது அரசியல் விடுதலை மட்டுமல்ல; உயர்ந்த இலக்கை நோக்கி உறுதியுடன் பயணிக்கும் ஒரு தேசத்தின் மனவலிமை, தியாக உணர்வு மற்றும் தன்னம்பிக்கையின் வெளிப்பாடு என்பதை காலகாலத்திற்கும் நினைவூட்டும்!

# கருத்துடேன்










# Special Wedding Package Discounts!

## As a heartfelt initiative, our management is offering exclusive wedding package discounts for:

- Kadambur Sri Mariamman Mahal A/c
- Raasi Palace A/c
- Lalithambiga Catering
- TTD Constructions

- Families of wounded & ex-servicemen
- Children of Temple Priest
- Physically challenged brides or grooms
- SC/ST brides or grooms
- Members of Rashtriya Swayamsevak Sangh (RSS)
- Members of Bharatiya Janata Party (BJP)

*Let's celebrate courage love and equality, together!*

*Management decision will be final and binding.*

Kadambur
**TNT Raajasekar**

**Mobile : 93645 67333**

MATHURA COMPLEX

41/9, Medavakkam Main Road, Opp. Metro Piller 586,
Ghanesh Nagar, Madipakkam, Chennai - 600 091.

Mobile : +91 98412 70333 / 044 2247 8333

www.kadambur.in | www.raasi.co.in | kadamburtntr@gmail.com



## PUBLISHED BY

Printed and published on behalf of Ore Naadu Sewa and Pathippagam Trust.
"Kamalalayam", 19, Vaidyaram Street, T.Nagar, Chennai - 17.
Phone: 81221 70127, Printed at: Chennai Offset Printers,
No19/1 & 21/2, Kitabath Khan Bahadur Street, Ellis Road,
Chennai - 600 002. Editor and Publisher: SR Sekar